6729

ஓம்.

No. 5. நெ. ரு.

# திருமங்கலிய தாரணவிதி.

RAMANANDPAARIYAR
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41.

ஸ்ரீ
திருவனந்தபுரம்
இந்துசுதர்மாசாரசபையின்
பரிபாலகரும்
சென்னை, இந்து டிராக்ட் சொஸைட்டியின்
கௌரவமெம்பருமான
பரிசுத்த விசிஷ்டாத்வைத பரமதகண்டனம்
கோயமுத்தூர்,
ம.சே.வேங்கடகிரிசாஸ்திரியாரவர்களால்
இயற்றப்பட்டது.

---

PUBLISHED BY
**S. R. NAMASIVAYA CHETTIAR,**
*Proprietor U. B. R Series &c.*
**Madras.**
PRINTED AT "THE MADRAS RIPON PRESS."
*346, Thambu Chetty Street.*
1888

Price 3 Pies ] [விலை பை மூன்று.

**POSTAGE EXTRA.**

6729

துவது, லோகோபகாரமும், சகோதரமைத்திரதருமமும் ஆ
நமாகையால், அவ்வாறு அநுஷ்டித்துவரும் அநாசாரங்களில்
ன்றாகிய, சுவர்ணக்கொடியில் திருமங்கிலியங்கோர்த்துத்தரி
க்கும் அநாசாரத்தை இங்கு எடுத்துக்காட்டிக்கண்டித்து, சப்
மாணங்களோடுகூடிய சதாசாரத்தை ஸ்தாபிக்கத்துணிந்
தேன். சகலரும் உண்மையையறிந்து ஆசரிக்கப்பிரார்த்திக்
ன்றேன்.

பிரமாணமின்றி எதுவுங்கொளற்பாலதன்று. ஆகவே, ம்மவர்கள் அனுஷ்டிக்கும் சகலதர்மங்களுக்கும் பிரமாண ரந்தங்களின்னவையென்பதை முதலில் நிர்ணயிக்கவேண் டியது ஆவசியகம்.

பராசரமாதவீயத்தில் - ௧௨ - வது வசனம்.

𑌧𑌰𑍍𑌮𑌂 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 ।
𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌲𑍋𑌕𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌃 ॥

(பொருள்) தர்மத்தை அறிய இஷ்டமுள்ளவர்களுக்கு முதலாவது வேதமும், இரண்டாவது தர்மசாஸ்திரமும், மூன்றாவது சிஷ்டாசாரமுமென நிச்சயிக்கப்பட்டிருக்கின் றன.

காளுதர் - ௧ - ௧௦எ.

𑌵𑍇𑌦𑍋𑌕𑍍𑌤𑌃 𑌪𑌰𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌚𑌾
𑌪𑌰𑌃 । 𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌚𑌾𑌰𑌶𑍍𑌚 𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌧𑌰𑍍𑌮𑌲
𑌕𑍍𑌷𑌣𑌂 ॥

ஸ்ரீ

பரஸ்மைபிர்மணேநமஃ.

# திருமங்கலியதாரணவி

## உபோத்காதம்.

*புண்ணிய பூமியாகிய பாரதகண்டத்தில் வசிக்கும் சகோதரர்களே!*

அநாதி பகவானாகிய பரமேசுவரனால் அருளிச்செ
பட்ட வேதசாஸ்திரங்களால் பிரதிபாதிக்கப்படும் இ
த்தை நம்முன்னோர்களாகிய ஆரியர்களும், அவர்க
பின் சந்ததியாகிய நாமும் சுருதியுத்தி அநுபவங்களால்
ந்து பயபக்திவிசுவாசத்தோடு ஆதரித்துவருகிறோம். அ
யிருக்க இற்றைக்குச்சுமார் ஆறாயிரம்வருஷங்களாக
மாய் மனிதர்களாலுண்டாக்கப்பட்ட பல புனசமயங்க
யவும், அதை ஆதரித்துவந்த அரசர்களுடையவும் கொ
யினால் நமது மதசாஸ்திரங்களைப்படிக்கவும், அதன்படி
வும், நடத்தவும் நம்மவர்களுக்கு அனுகூலப்படாமற்போ
று. போகவே, காலந்தோறும் இடையிடையே அநா
கள்நுழைந்தன. சுவல்பகாலஞ்சென்றதன்மேல்அவைக
மவர்களுக்குச் சிஷ்டாசாரம்போல் தோன்றும்படி ஆ
டன. அப்படியே இப்பொழுதும் சிலதுராசாரங்கள்தே
மிக விரைவாய்ப் படர்ந்துவருகின்றன. அவைகளை உ
குடனே பிரஸ்தாபித்துக்கண்டித்துச் சதாசாரங்களை

6124

(பொருள்) எல்லார்க்கும் தர்மங்களுடைய இலக்கணத்தைத் தெரிந்துகொள்ள முதலாவது வேதம், இரண்டாவது தர்மசாஸ்திரம், மூன்றாவது சிஷ்டாசாரமாகவிருக்கின்றன.

இந்துக்களுக்கு மதசாஸ்திரமாகிய பிரமாணகிரந்தங்கள் இன்னின்னவை என்பதற்கு இதுபோன்ற அநேகபிரமாணங்களுண்டென்றாலும், அவைகளை விஸ்தாரமாயெழுதாமல், இப்புத்தகம் சகலஜனங்களுக்குஞ்சரசவிலைக்குக்கிடைக்கும்பொருட்டும், எவ்விதத்தொழிலாளிகளும் சுலபமாய்த்தெரிந்துகொள்ளும்பொருட்டும்இதில் ஆங்காங்கு ஆவசியகமான பிரமாணங்கள் இரண்டு அல்லது மூன்றுக்குமேற்படாமல் காட்டிவரப்படும்.

சாஸ்திரங்களின்விதியை அநுசரித்து நம்மவர்கள் விவாககாலத்தில் வதுவின்கழுத்தில் வரனால் கட்டப்படுந் திருமங்கலியம் பருத்திநூலினாலுண்டாக்கப்பட்டகயிற்றிலேயே கோர்த்திருக்கவேண்டுமென்பது நிச்சயமானதருமமாயிருக்க, சுமார் ஐந்தாறுவருஷங்களுக்கிப்பால் அநேகம்பேர் சுவர்ணக்கொடியில் ஷை திருமங்கிலியத்தைக் கோர்த்துக்கட்டும் வழக்கத்தையநுசரித்துவருகிறார்கள். அது அதிகடூர அநாசாரம். சிஷ்டாசாரத்தையாவது,வேதசாஸ்திரங்களையாவது, அல்லது இரண்டையுமாவது திடமாய்நம்பிநடக்கும் நம்மவர்கள் இப்படிப்பட்ட முக்கியமானவிஷயத்தில் அனாதரணியமாயுள்ள "தாந்தோணிமதத்தை" ஆசரித்துநடப்பது எவ்வளவுந்தகுதியல்ல.

வேதசாஸ்திரம், அல்லது பூர்வாசாரங்களைவிட்டு விபரீதமாய் நடக்கக்கூடாதென்பதற்குப் பிரமாணம்.

பாரதத்தில் பகவான் வசனம்.

ஶ்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்⁴ய வர்ததே।
ஆஜ்ஞாச்சே²தீ மம த்³ரோஹீ மத்³ப⁴க்தோऽபி ந வைஷ்ணவ:॥

(பொருள்) சுருதியும், ஸ்மிருதியும் என்னுடைய ஆக்ஞைகளானபடியினாலே, அவைகளை எவன் மீறிநடக்கிறானோ அவன் என்னுடையபக்தனாயிருந்தபோதிலும் என்னுடைய உத்தரவைத்தள்ளி நடந்தவனானதலால், எனக்குத்துரோகியாவான் என்பதற்குச்சந்தேகமில்லை.

ஸ்மிருதி முக்தாபலத்தில் ஆங்கீரச வசனம்.

ஶிகோர்த்⁴வபுண்ட்³ரஸூத்ராணி [illegible] ஸ்வயாசாரமேவ ச।
[illegible]॥

(பொருள்) குடுமி, திரியக்புண்டரம், அல்லது ஊர்த்துவபுண்டரம், பூணூல் அல்லது திருமங்கிலியச்சரடு, மதாசாரம் முதலிய இவைகள் தங்கள் தங்கள் பூர்வீகாள்நடந்தபிரகாரம் நடக்கவேண்டும்; இல்லாவிடில் மகாபாபியாவான் என்பதற்குச்சந்தேகமில்லை.

இவ்வசனங்களால் பூர்வாசாரத்தையாவது, சுருதிஸ்மிருதிகளையாவது இவையளவுந்தப்பி நடக்கக்கூடாதென். அப்படிநடக்கிறவன் தெய்வத்துரோகியும், பாபியுமாகிறானென்றும் ஸ்பஷ்டமாய்ஏற்படுகிறபடியால், திருமங்கலியச்சூத்திரம் பருத்திநூலாக இருந்ததைச் சுவர்ணக்கொடியாகமா

6729
V. SWAMINATHAIYAR
TIRUVANMIYUR

னது அதிகப்ரசங்கித்தனமென்பது நிர்வாதமான விஷயமென்க.

விவாஹகாலத்தில் தரிக்குந்திருமங்கிலியமே சாஸ்திரவிதியாலேற்பட்டிராமல், கேவலம் ஏதோ ஓர்விதவழக்கமாத்திரமாயேற்பட்டுள்ளது என்று சிலராற் சொல்லப்படுகின்றது ஆகவே, முதன்முதல் அதனிருப்புக்கு விதிகாட்டி அதனை நிலைநிறுத்துவதைவிடுத்து, அம்மங்கிலியத்தைக் கோர்க்கும் சூத்திரத்தை சுவர்ணக்கொடியாக, மாற்றினது அநாசாரம் என்று வழக்கிடவந்தது பொருந்தாது என்னில்,

சாஸ்திரவிரோதமாய்த் திருமங்கிலியத்தைச் சுவர்ணக்கொடியில் கோர்த்துக்கட்டத் தொடங்கியதுபோதாமல் திருமங்கலியதாரணத்தைச் சம்சயிப்பதுவுங்கூடவா! பளா! பளா!! நன்றாயிருக்கிறது !!! மந்திரவத்தாய் விவாகஞ்செய்யுமூரிலுங் குடியிருந்தறியீர்கள்போலும் ! விவாககாலத்தில் வரன், வதுவின்கழுத்தில் திருமங்கலியதாரணம் செய்யும்போது சொல்லும்மந்திரத்தைக்கேளுங்கள்.

𑌮𑌾𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑌂 𑌤𑌨𑍍𑌤𑍁𑌨𑌾𑌨𑍇𑌨 𑌮𑌮𑌜𑍀𑌵𑌨𑌹𑍇𑌤𑍁𑌨𑌾 ।
𑌕𑌣𑍍𑌠𑍇𑌬𑌧𑍍𑌨𑌾𑌮𑌿𑌸𑍁𑌭𑌗𑍇 𑌤𑍍𑌵𑌂𑌜𑍀𑌵𑌶𑌰𑌦𑌾𑌂𑌶𑌤𑌮𑍍 ॥

(பொருள்) ஹேசுபகே! என்னுடையதீர்க்காயுசு நிமித்தமாயிருக்கிற இந்தத் திருமங்கலியத்தோடு கூடியிருக்கும் "தந்து"வை உன்கழுத்தில்கட்டுகிறேன்; நீ நூறுவருஷம் ஜீவித்திருப்பாயாக.

இந்தமந்திரத்தினலும், கீழேஉதகரிக்கும் கோபிலஸ்மிருதி வசனத்தாலும் திருமங்கலியதாரணம் சாஸ்திரோக்தமென் பது நிர்வாதமாயேற்படும். உசநாதிசூத்திரங்களினும் விதித் திருப்பதைக் கண்டுகொள்க.

இம்மந்திரத்தில் தந்துஎன்னும் பதத்திற்குப்பருத்திநூலி னலேயே திருமங்கலியதாரணஞ்செய்யவேண்டுமென்று ஸ்ப ஷ்டமாயேற்படுகின்றது.

மேல்பிரமாணத்தில்வந்த " தந்து " என்னும்பதத்திற்குப் பருத்திநூலேதான் என்றுபொருள் ஏற்படுவதெப்படி? தந்து வென்பது பொதுப்பதமாய்நின்று சுவர்ணதந்து, பிசதந்து மு தலான பலதந்துகளுக்கு மிடந்தரக்கூடுமாதலால் கார்ப்பாச தந்துவென்னும் பருத்திநூலொன்றையே குறிக்க அப்பதம் எழுந்ததென்று சாதிக்கமுடியாது; ஆகவே,சுவர்ணக்கொடியி லும் திருமங்கலியத்தைக்கோர்த்துக்கட்டத்தடையில்லை என் னில்,

"தந்து" என்னும்பதம் பருத்திநூலைக்குறிக்குமேயன்றி, சுவர்ணக்கொடிமுதலானவைகளைக்குறிக்கமாட்டாது. ஏனெ னறல், அமரத்தில் "ஸூத்ராணி நரி தந்தவ:" எனப் பிரயோகமிருப்பதாலும் "தந்து" வென்னும் தனிப்பதத் தின் அர்த்தத்தை விசாரிக்குமிடத்து தநுதேவரேத்ர ஔஹிரிதி தந்தவ: (தநு விஸ்தாரே) இதன்பொருள்; வஸ்திரம் விஸ்தரிக்கப் படுதல் என்று ஏற்படுவதாலும், "தந்து" வென்னும்பதம் பருத்திநூலைப்பொருளாகக்கொ

ண்டுகிற்குமேயன்றி மற்றெந்தவிதத்தாலும் விசேஷபதங்கள் சேர்ந்தாலன்றி வேறுநூற்களைப் பொருளாகக்கொள்ளமாட்டாது. மேலும், அமரத்தில் "தந்துவாய꞉ குவிந்த꞉ ஸ்யாத் துந்நவாயஸ்து ஸௌசிக꞉" என்னும்வசனத்தில் தந்துவாயன் என்பது சேணியன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியென்றால், "தந்தூந் வயதீதி தந்துவாய꞉" இதன்பொருள்; நூலைநெய்கிறவன் என்று ஏற்படுகின்றது. ஆகவே, தந்துவாயன் என்னும்பேர், பருத்தியினால் நூலுண்டாக்கி நெய்யுந்தொழிலாளியாகிய சேணியனைமாத்திரம் குறிக்கின்றதன்றி, சுவர்ணக்கொடி முதலானவைகளை உண்டாக்கும் தட்டான்முதலிய ஆட்களைக்குறிக்காது; தட்டான்முதலானவர்களுக்குத் தந்துவாயன் எனப் பெயருங்கிடையாது. ஆகையால் தந்துவென்னும்பதம் சுவர்ணதந்து, பிசதந்துமுதலானபொருளை ஒருபோதும் அர்த்தங்கொள்ளாதென வறிக.

திருமங்கிலியச்சரடு பருத்திநூலாகத்தா னிருக்கவேண்டுமென்று சாஸ்திரங்கள்விதிக்க யாதொருநியாயமுந்தோன்றவில்லை; ஆகையால் அதுவிஷயமான நியாயங்களைக்கண்டறிவது இச்சந்தர்ப்பத்திற்கு மிகவும் ஆவசியகமென்று கேட்கும் பக்ஷத்தில்,

க-வது. ஸ்திரீகளின் விவாகத்தை உபநயனஸ்தானமாக விதிக்கப் பட்டிருக்கின்றமையால், உபநயனஸ்தானத்திற்கு முக்கிய அடையாளமாகிய பூணூல் எப்படிபருத்திநூலிற்போடப்படுகின்றதோ, அப்படியே ஸ்திரீகளுக்குத்திருமங்கலியதா

U.V. SWAMINATHA IYER

ரணமும் பருத்திநூலாகவே இருக்கவேண்டுமென்பது சாஸ்திரங்களின் துணிபாம்.

ஸ்திரீகளுக்கு விவாகமே உபநயனஸ்தான மென்பதற்குப் பிரமாணம்.

மநு - ௨ - ௬௭.

𑌵𑍈𑌵𑌾𑌹𑌿𑌕𑍋 𑌵𑌿𑌧𑌿𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍋 𑌵𑍈
𑌦𑌿𑌕𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 । 𑌪𑌤𑌿𑌸𑍇𑌵𑌾 𑌗𑍁𑌰𑍌 𑌵𑌾𑌸𑍋 𑌗𑍃𑌹𑌾
𑌰𑍍𑌥𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌪𑌰𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 ॥

(பொ-ள்.) ஸ்திரீகளுக்கு விவாஹத்தை உபநயநமாகவும், பர்த்தாவுக்குப் பணிவிடைசெய்வதைக் குருகுலத்தில் வேத மோதுவதாகவும், வீட்டைக் காப்பாற்றுவதைச் சமிதாதான மாகவும் சொல்லப்படுகின்றன.

வியாக்கிரபாதர். ௧ - ௫௨.

𑌉𑌪𑌨𑌯𑍇 𑌨𑍋𑌦𑌿𑌤𑌃 𑌕𑌾𑌲𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑍁𑌦𑍍𑌵𑌾𑌹𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑍁𑌪𑌨𑌯𑌨𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌵𑌿𑌵𑌾𑌹𑌂 𑌮𑌨𑍁𑌰𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍

(பொ-ள்.) உபநயநத்துக்குச் சொல்லியிருக்கப்பட்ட காலமே ஸ்திரீகளுக்கு விவாகத்துக்குச் சொல்லியிருக்கின்றது. ஸ்திரீகளுக்கு விவாகமே உபநயனமாக மனுவினுல் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீ

யம ஸ்மிருதி-௨௭௬.

விவாஹம் சௌபநாயநம் ஸ்த்ரீணாமாஹ பிதாமஹ: ।
தஸ்மாத் கர்ப்பாஷ்டமே ஸ்ரேஷ்ட: ஜந்மதோ வாஷ்டவர்ஷகம் ॥

(பொ-ள்) ஸ்திரீகளுக்குவிவாகமே உபநயநமாகப் பிரமனால் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனபடியினாலே ஸ்திரீகளுக்கு எட்டாவது அல்லது ஏழாவதுவயதைத்தான் விவாகத்துக்கு விசேஷகாலமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

௨-வது. தர்மங்களுக்கு அங்கமாய் ஏற்படும் அறிகுறிகள் யாவும் எவ்வித அந்தஸ்துள்ளவர்க்கும் சமானதருமமாயிருக்கவேண்டுமென்றும், அங்ஙனமில்லையாகில் அவ் வியவஸ்தையாதி அசந்தர்ப்பங்களால் அது நிலைபெறாதழியுமென்றும், அதனால் சமயஒழுக்கமும் ஐக்கியமத்தியமும் குன்றித்தருமத்தின் நிலை தாறுமாறாய்க் கெட்டலையுமென்றும், தருமத்தின் அடையாளம் சுலபமானதும்எந்தவிபத்தையும் சகிக்கக்கூடுமானதுமா யிருக்கவேண்டுவது ஆவசியகமென்றும், விசாரத்தே சுருதி ஸ்மிருதிகள் எதையும்விதிக்கும். அதற்கொப்பாகவே ஸ்திரீகளுக்குச் சர்வமுக்கியமும் உபநயநஸ்தானமுமாகிய விவாக தருமத்துக்கு அறிகுறியாய்த் திருமங்கலியச் சரடு பருத்திநூலாகயிருக்கவேண்டுமென்று ஏற்பட்டிருக்கின்றது.

௩-வது. தருமத்தின்நிலை தாறுமாறாய்க்கெடும் என்பதற்குச் சாக்ஷி, தற்கால நவீன ஆசாரத்தாற்காணும் அநுபவமே போதும். எங்ஙனமெனில் தங்கக்கொடியில் தாலியைக்கோ

ர்த்துக் கட்டிக்கொண்ட சில ஸ்திரிகள், சமயம்வரும்போது அதை அடமானம்வைத்தும், இரவல்கொடுத்தும் பிறகு, தாங்கள் வெறுங்கழுத்தாக இருப்பதைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கின்றோ மல்லவா ?

௬-வது. ஸ்திரீயானவள் பிதிர்குலத்தைவிட்டுப் பதியின் குலத்தை அடைந்து அதிற்றானே நன்றாகப் பந்தனஞ்செய்யப்பட்டாள் என்று விவாகமந்திரத்திற் சொல்லப்பட்டிருப்பதை அநுசரித்து, பந்தனசாதனமாகிய நூல்கயிறே திருமங்கலியதாரணத்துக்குயோக்கியப்பட்டதென வுணர்ந்து, பருத்தி நூலைச் சாஸ்திரங்களி லெடுத்திருக்குமுண்மை இனிதுவெளிப்படுகின்றது. இத்தியாதி நியாயங்களால், திருமங்கலியச்சரடு பருத்திநூலாகத்தானிருக்கவேண்டுமென்று புத்திமான்களுக்கு விளங்காமற் போகாது.

திருமங்கலியத்தைச்சுவர்ணக்கொடியில் கோர்த்துக் கட்டியிருந்தாலும், அதற்குள், பட்டுச்சரடும் செலுத்தியிருக்கின்றபடியால் தற்கால ஆசாரம்;சாஸ்திரத்தையாவது,பாரம்பரிய ஆசாரத்தையாவது தீரத்தள்ளவில்லை; அன்றியும் சுவர்ணக்கொடியிற் கோர்த்துக்கட்டுவது கழுத்தில் ஓர்வித ஆபரணம்போலும்விளங்கி அழகுசெய்யும் என்றுசொல்லும் பக்ஷத்தில்,

௭-வது. இந்தப்பட்டுச்சரடுநியாயம் எதுபோலிருக்கிறதென்றால் மார்பில் பூணூல் இல்லாமல்வரும் பிராமணனொருவனைப்பார்த்து அவன் சிநேகிதனொருவன் உமது மார்பிற் பூணூலில்லை, இதென்னகாரணம் என்றுவினவ, அதற்கந்த